**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.178/2017**

2025–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12–ம் நாள் புதன்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 12.11.2025 | | |
| பெயர்: | தெட்சிணாமூர்த்தி (DW–2 Chief ) | தகப்பனார் பெயர்: | வெங்கடாசலம் |
| கிராமம்: | சட்டநாதப்புரம் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 64 /2025 |

**முதல் விசாரணை : 12.11.2025**

நான் இவ்வழக்கின் பிரதிவாதி தரப்பு சாட்சி ஆவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். என்னுடைய சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

1. பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து **பி.வா.சா.ஆ 13** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

எனது சாட்சியத்தை ஏற்றுக்கொண்டு தக்க உத்தரவிடும்படி வேண்டுகிறேன்.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.